# அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை
# ANG MO KIO TAMIL METHODIST CHURCH

## விண்ணேற்பு மற்றும் அல்டஸ்கேட் ஞாயிறு ஆராதனை
## *Ascension/Aldersgate Sunday Service*
**21st May 2023 9.30am**

✝ ஆராதனைக்கு அழைப்பு — திரு. ஆன்டன் மோசஸ்
Call to Worship — Mr. Anton Moses

இறை வணக்கப் பாடல் — பாடகர் குழு
Introit — Choir

ஜெபம் — திரு. ஆன்டன் மோசஸ்
Prayer — Mr. Anton Moses

✝ தொடக்கப் பாமாலை — சபையார்
Opening Hymn — Congregation

தெய்வாட்டுக் குட்டிக்கு

1. தெய்வாட்டுக் குட்டிக்கு பன் முடி சூட்டிடும்
இன்னிசையாய்ப் பேரோசையாய் விண் கீதம் முழங்கும்
உள்ளமே போற்றிடு, உனக்காய் மாண்டோராம்
சதாகாலமும் அவரே ஒப்பற்ற வேந்தராம்.

2. அன்பார்ந்த கர்த்தர்க்கு பன் முடி சூட்டிடும்
கை கால் விலாவின் காயங்கள் விண்ணிலும் விளங்கும்.
பார்ப்பரோ தூதரும் ஏறிட்டக் காயங்கள்?
பணிவரே சாஷ்டாங்கமாய் மூடுவர் தம் கண்கள்.

3. சமாதானக் கர்த்தர்! பன் முடி சூட்டிடும்
போர் ஓய்ந்து ஜெப ஸ்தோத்ரமே பூமியை நிரப்பும்
ஆள்வார் என்றென்றைக்கும் ஆளும் எவ்விடமும்
விண் லோக பாக்கிய சிறப்பு விளங்கி வளரும்.

4. ஆண்டாண்டும் ஆள்வோர்க்கு பன் முடி சூட்டிடும்
சராசரங்கள் சிஷ்டித்தோர் உன்னத தெய்வமும்
பாவிக்காய் ஆருயிர் ஈந்த நல் மீட்பரே,
சதா நித்திய காலமாய் உமக்குத் துதியே.

✝ மாறி மாறி வாசித்தல் 21ம் ஞாயிறு
தேவ ஆராதனை புத்தகம் — சபையார்
பக்கம் 44, சங்கீதம் 63
Psalter Reading –Page 44 Psalm 63 — Congregation

## " நீரே என்னுடைய தேவன் "

✝ தந்தை போற்றி — சபையார்
Gloria Patri — Congregation

துதி ஆராதனை
Singspiration

ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம் — மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Thanksgiving & Pastoral Prayer — Rev. Albert Vijay Joseph

பரமண்டல ஜெபம் — சபையார்
Lord's Prayer — Congregation

✝ காணிக்கை பாடல் — சபையார்
Offertory Song — Congregation

இவரே பெருமான்

பல்லவி

இவரே பெருமான், மற்றுப்
பேர் அலவே பூமான், - இவரே பெருமான்.

சரணங்கள்

1. கவலைக் கிடங்கொடுத் தறியார் - வேறு
பலவினை யாதுமே தெரியார் - இப்
புவனமீது நமக்குரியார் - இவரே

2. குருடர்களுக் குதவும் விழியாம், - பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம், - தெய்வம்
இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம். - இவரே

3. பலபிணி தீர்க்கும் பரிகாரி, - சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி, - எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி. - இவரே

4. அறஞ் செய்வதனில் ஒரு சித்தன், - கொடு
மறம்விடு பவர்க்கருள் முத்தன் - இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன். - இவரே

5. அலகைதனை ஜெயித்த வீரன், - பவ
உலகை ரட்சித்த எழிற்பேரன், - விண்
ணுலக வாழ் தேவ குமாரன். - இவரே

6. பொன்னுலகந் தனில்வாழ் யோகன், - அருள்
துன்ன உலகில் நன்மைத் தேகன், - நம்பால்
தன்னை யளித்த ஓர் தியாகன். - இவரே

✝ பூலோகத்தாரே யாவரும் சபையார்
Doxology Congregation

✝ திருமறைப் பாடம் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:6-14 திரு. தனபாலன்
Scripture Reading : Acts 1:6-14 Mr. Dhanapalan

அருளுரை மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Sermon Rev. Albert Vijay Joseph

## " The Ascension "

✝ அர்ப்பணகீதம் சபையார்
Offertory / Closing Song Congregation

தேவனே நான் உமதண்டையில்

பல்லவி

தேவனே நான் உமதண்டையில் - இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்,

அனுபல்லவி

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை சேர்வேன்
தேவனே

சரணங்கள்

1 யாக்கோபைப் போல், போகும் பாதையில் - பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என்
கனாவில் நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா!
தேவனே

2 பரத்துக்கேறும் படிகள் போலவே - என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா என்றன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைக்கும் அன்பின் தூதராகச் செய்யும்
தேவனே

3 நித்திரையினின்று விழித்துக் - காலை எழுந்து
கர்த்தாவே நான் உம்மைப் போற்றுவேன்
இத்தரையில் உந்தன் வீடாய் என்துயர்க் கல் நாட்டுவேனே
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்
தேவனே

4 ஆனந்தமாம் செட்டை விரித்துப் - பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும்
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன்
தேவனே

அறிவிப்புகள் திரு. சாம்ராஜ் ஆசீர் ஜெயராஜ்
Announcements Mr. Samraj Asir Jeyaraj

✝ முடிவு ஜெபம் **&** ஆசீர்வாதம் மறைதிரு. ஆல்பர்ட் விஜய் ஜோசப்
Closing Prayer & Benediction Rev. Albert Vijay Joseph

✝ ஆசீர்வாதப் பாடல்
Benediction Song

✝ *Indicates Congregation standing / சபையார் நிற்கவும்*

Birthday list
1. Mr. Joash - 22nd May
2. Mrs. Mabel Robert Ravikumar - 24th May
3. Mr. Anbalagan Solomon - 25th May
4. Mrs. Juliet Nelson - 25th May
5. Mrs. Amutha Premkumar - 26th May

Wedding Anniversary list
1. Mr. Ruban Joyson & Mrs. Amutha Ruban - 24th May